**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC.No.198/2017** **Date :13/04/2023**

**PW8 (சண்முகம் த/பெ.ராசு ) குறுக்கு விசாரணை தொடர்ச்சி :** சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர் )**

1.இந்த வழக்கிற்கான முதல் தகவல் அறிக்கை எனக்கு முந்தைய ஆய்வாளர் ஜெயமோகன் என்பவர் பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கான சம்பவம் 2001 - 2003 ஆம் ஆண்டில் நடந்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையில் இந்த வழக்கிற்கான தகவல் எப்போது கிடைக்கப்பெற்றது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 21/07/2005. முதல் தகவல் அறிக்கையில் காலதாமதத்திற்கான காரணம் எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது காலதாமதம் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கிற்கான புகாரை முருகன் என்ற துணைப் பதிவாளர் அனுப்பியுள்ளார்.

2.30/06/2005 அன்று துணைப்பதிவாளர் வணிக குற்ற பிரிவிற்கு புகார் அனுப்பியுள்ளார். வணிகப்பிரிவு காவல் கண்காணிப்பாளர் சென்னை அவர்களால் இந்த புகார் பெறப்பட்டது என்பதை காண்பிக்கும் கையொப்பமோ முத்திரையோ இடப்பட்டுள்ளதா என்றால் அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரிவு 81 -ன் கீழான விசாரணை அறிக்கையை அ.சா. 1 முருகன் என்றைய தினம் பெற்றார் என்றால் 15/05/2005 அன்று பெற்றுள்ளார். 28/05/2003 அன்று விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். விசாரணை அறிக்கை இந்த வழக்கிற்கான புகார் உடன் இணைத்து அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பப்பட்டுள்ளது. இந்த புகார் உடன் என்னென்ன ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது என எந்தவித குறிப்பும் இல்லை என்றால் சரிதான். எனக்கு முந்தைய விசாரணை அலுவலர் இந்த வழக்கத்திற்கான விசாரணையை

20/07/2005 அன்று ஆரம்பித்துள்ளார். இந்த வழக்கத்திற்கான சாட்சிகள் அனைவரையும் அவர்தான் விசாரணை செய்துள்ளார் என்றால் சரிதான். நான் சாட்சிகள் யாரிடமும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு முந்தைய விசாரணை அலுவலர் விசாரணை செய்து வைத்த ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே எதிரிக்கு எதிராக நான் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஆவணங்களை இறுதி அறிக்கையை தாக்கல் செய்யப்படும் முன்பு பார்வையிட்டேன். நான் இறுதி அறிக்கையுடன் என்னென்ன ஆவணங்களை இணைத்து தாக்கல் செய்தேன் என்றால் குற்றப்பத்திரிக்கையில் இணைக்கப்பட்டுள்ள 32 ஆவணங்களை இணைத்து அனுப்பியுள்ளேன். மேற்கண்ட ஆவணங்கள் அனைத்தும் என்னால் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எந்தெந்த தேதிகளில் சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டார்கள் என சாட்சிகளின் வாக்குமூலங்களுடன் தேதி இடப்படவில்லை என்றால் சரிதான். இந்த வாக்குமூலங்கள் அனைத்தும் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட போது தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் இந்த வாக்குமூலங்கள் எல்லாம் ஜெயமோகன் எவ்வாறு தயாரித்தார் என எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

3.முதலாவதாக தாக்கல் செய்த இறுதி அறிக்கை கிஷான் கிரடிட் கார்டு சம்பந்தமான முறைகேடு என்றால் சரிதான். வங்கி துணை விதிகளின்படி எதிரிக்கு கடமைகளும், பொறுப்புகளும் நியமிக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் அந்த துணை விதியை நான் கைப்பற்றி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. துணைப் பதிவாளரால் 15/05/2005 அன்று பெறப்பட்டதாக கூறப்படும் இந்த அறிக்கையின் அடிப்படையில் 30/06/2005 அன்று புகார் கொடுத்ததற்கான காலதாமதம் பற்றி எனது முந்தைய விசாரணை அதிகாரி முருகனை விசாரித்த போது விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளாரா என்றால் இல்லை. விசாரணை அதிகாரி ராமலிங்கம் அவரது விசாரணையை எந்த தேதியில் முடித்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதாக

CMJ

அவரது வாக்குமூலத்தில் கூறியுள்ளாரா என்றால் அவ்வாறு குறிப்பிடவில்லை. பிரிவு 81 ன் கீழான விசாரணை அறிக்கையில் விசாரணை அதிகாரி 11/5/2005 என தேதியிட்டு கையொப்பமிட்டுள்ளார். ஆனால் எங்களிடம் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தில் 30/11/2003 ல் விசாரணை முடிக்கப்பட்டதாக கூறியுள்ளார். விசாரணை அதிகாரி அவருடைய அறிகையில் அவரது அறிக்கைக்கு ஆதாரமாக மூன்று தனி அறிக்கைகளை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இந்த மூன்று தனி அறிக்கைகளை பற்றி விசாரணை அதிகாரி எங்களிடம் வாக்குமூலம் கொடுத்தபோது கூறவில்லை. மேலும், அந்த விசாரணை அறிக்கையில் எந்தெந்த சாட்சிகளை விசாரணை செய்தேன் என்றோ என்னென்ன ஆவணங்களை கைப்பற்றினேன் என்றோ, அல்லது என்னென்ன ஆவணங்களை துணை பதிவாளரிடம் சமர்ப்பித்தோம் என கூறவில்லை என்றால் சரிதான்.

4.இந்த மூன்று தனி அறிக்கைகளை சமர்ப்பித்த தனி அலுவலர் ராஜா சுவாமிநாதன் சரக மேற்பார்வையாளர் சந்திரன் ஆகியோரை விசாரித்ததாக விசாரணை அதிகாரி கூறியுள்ளாரா என்றால் கூறவில்லை. நானோ அல்லது எனக்கு முந்தைய விசாரணை அதிகாரி ஜெயமோகனோ மேற்கண்ட நபர்களிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளோமா என்றால் இல்லை.

5.தர்மன் அவரது காவல்துறை விசாரணையின் போது வங்கி கடன் பதிவேடு மற்றும் கடன் பெறும் விண்ணப்பம் ஆகியவற்றில் கையொப்பமிட்டேன் என கூறியுள்ளார் என்றாலும் ஆனால் அந்த கையப்பத்தை யார் பெற்றார்கள் என கூறவில்லை என்றாலும் சரிதான். அதே வாக்குமூலத்தில் கடன் பணத்தை திரும்ப தருவதாக சொன்னார்கள் என கூறியுள்ளார் என்றால் சரிதான் ஆனால் அதை யார் கூறினார்கள் என பெயரை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வங்கியின் எந்த பணியாளர் வந்து கடன் எண் 25 ன், ரூபாய் 5190 கடன் தொகை செலுத்த வேண்டும் என கூறினார் என தருமன் அவரது வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அதே வாக்கு மூலத்தில் 30/06/2001 அன்று

ரூபாய் 5550 செலுத்தப்பட்டு அதற்கு ரசீது என்னால் பெறப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

6.அந்தப் பணம் வரவு வைக்கப்படவில்லை என தெரிந்து கொண்டேன் என கூறியுள்ளார் என்றாலும் ஆனால் யார் மூலமாக அந்த விவரத்தை தெரிந்து கொண்டேன் என அவரது வாக்குமூலத்தில் கூறவில்லை என்றாலும் சரிதான். மேலும் அசல் ரசிது அப்போது கொடுக்கப்படவில்லை என்றும் நகல் ரசீது தான் கொடுக்கப்பட்டது என்றும் அவரது வாக்குமூலத்தில் கூறியுள்ளார் என்றால் சரிதான். ஜெராக்ஸ் நகலுடன் வங்கி அடிக்கட்டையை நான் எனது விசாரணையின் போது ஒப்பிட்டு பார்த்தேனா என்றால் இல்லை. விசாரணை அதிகாரியும் இந்த ஆவணங்களை ஒப்பிட்டு பார்த்ததாக எங்களது வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான்.

7. போர் மன்னன் காவல் துறைக்கு கொடுத்த வாக்குமூலத்தில் கடன் பதிவேடு மற்றும் பணம் தரும் விண்ணப்பம் ஆகியவற்றில் கையொப்பமிட்டு கொடுத்தேன் என கூறியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அந்த கையப்பத்தை யார் பெற்றார்கள் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கே.சி.சி கடனில் ரூ.9340/-செலுத்தப்பட வேண்டும் என கூறினார்கள் என அதே வாக்குமூலத்தில் கூறியுள்ளார் என்றால் சரிதான் ஆனால் அது எந்த பணியாளர் மூலம் கூறப்பட்டது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். செயலாளர் போர்மன்னனிடம் ஒரு ரசீதை கொடுத்ததாகவும் அந்த ரசீதை விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்ததாகவும் அவரது வாக்குமூலத்தில் கூறியுள்ளார் என்றால் சரிதான். அந்த ரசீது இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த போர் மன்னன் மீது இதே சங்கத்தில் மோசடி செய்ததாக வேறொரு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்தப் போர் மன்னன் இந்த சங்கத்தில் கடனை பெற்று விட்டு அதை முறையாக திரும்ப செலுத்தி விட்டார் என்றாலும் அதை நான் சரிவர விசாரணை செய்யவில்லை என்றாலும் சரி அல்ல

8. சாந்தப்பன் என்ற உறுப்பினர் எங்களது வாக்குமூலத்தில் வங்கி பணியாளர்கள் கடன் திட்ட பதிவேடு மற்றும் கடன் பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவற்றில் கையொப்பம் பெற்றார்கள் என சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் அந்தப் பணியாளர்களின் பெயரை சாந்தப்பன் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். யார் சாந்தப்பனிடம் கையொப்பம் பெற்றார்கள் என எனது விசாரணையில் நான் தெரிந்து கொண்டேனா என்றால் செயலாளரான எதிரி தான் பெற்றுக் கொண்டார். எந்த சாட்சி செயலாளர் கையொப்பம் பெற்றார் என குறிப்பிட்டு எங்களிடம் கூறியுள்ளார் என்றால் குறிப்பிட்டு கூறவில்லை. நான் கடனை திரும்ப செலுத்துவதாக கூறப்படும் ரசீதில் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் என்றும் ஆனால் நான் அதனை மறுத்து விட்டேன் என சாந்தப்பன் அவரது சாட்சியத்தில் கூறியுள்ளார் என்றால் சரிதான். அந்த ரசீது எங்களால் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது அசல் ரசீது தான். இந்த ரசீதில் யார் கையொப்பமிட்டுள்ளார்கள் என எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். செயலாளர்தான் அதில் கையொப்பமிட்டுள்ளார். இந்த வாக்குமூலத்தில் செயலாளர் ஐயப்பன் விட்டதாக எந்தவித சங்கதிகளும் இடம் பெறவில்லை என்றால் சரிதான். செயலாளர்தான் கையப்பத்தை கேட்டார் என்றும், செயலாளர்தான் அதே கையப்பத்தை இட்டுள்ளாரா என்றும், விசாரணை அதிகாரி அவரது வாக்குமூலத்தில் கூறியுள்ளாரா என்றால் கூறவில்லை. சாந்தப்பனுக்கு யார் மூலமாக இந்த வங்கியில் கடன் நிலுவையில் உள்ளது என தெரிந்து கொண்டார் என்ற எந்த விவரமும் இந்த வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த சாந்தப்பனாவது நான் கடன் கேட்டேன் என்றும், ஆனால் கடன் எனக்கு கொடுக்கப்படவில்லை என்றும், யாரிடமாவது தனி புகார் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. சாந்தப்பன் இந்த வங்கியில் கடன் பெற்றுள்ளார் என்றாலும் அவர் சாட்சியம் அளித்தபடி இந்த வங்கியில் அவன் கடன் பெறவில்லை எனக் கூறுவது பொய் என்றால்

சரியல்ல நான் ஆவணங்களை முறையாக பரிசீலிக்காமல் எதிரியின் மீது பொய்யான வழக்கை தொடர்ந்து உள்ளேன் என்றால் சரியல்ல.

9. சந்தோஷம் என்பவர் அவரது வாக்குமூலத்தில் கடன் பேரேட்டிலும் பணம் பெரும் விண்ணப்பத்திலும் வங்கி பணியாளர்கள் எனது கைரேகை கேட்டார்கள் என கூறியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அது எந்த பணியாளர் கூறினார் என எந்த விவரமும் இல்லை என்றால் சரிதான். வங்கி பணியாளர்கள் கடனை வசூல் செய்ய வந்தபோது நான் கடன் பெற்றதாக கூறினார்கள் எனவும் அதனால் நான் அதிர்ச்சி அடைந்தேன் எனவும் கூறியுள்ளார் என்றால் சரிதான் ஆனால் அது எந்த பணியாளர்கள் எந்த தேதியில் வந்து சந்தோஷத்திடம் கூறினார்கள் என எந்த விவரமும் இல்லை என்றால் சரிதான். இவரும் தான் கடன் பெறவில்லை என எந்த வித தனிப்பட்ட புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். லட்சுமணனிடம் இவர் கையொப்பமிட்டு கொடுத்ததாகவோ அல்லது அவர் சந்தோஷத்திற்கு பணம் கொடுத்ததாகவோ எந்தவித குறிப்பும் இடம்பெறவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வரவு செலவிற்கும் எவ்வாறு தொடர்பு உண்டு என எனது விசாரணையில் நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரி அல்ல. இந்த வரவு செலவிற்கும் எதிரிக்கும் எவ்வாறு தொடர்பு உண்டு என விசாரணை அதிகாரி ராமலிங்கம் என்பவரும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

10 மலர்செல்வி அவரது வாக்குமூலத்தில் ஏற்கனவே பெற்ற STSF 549 என்ற கடன் கணக்கில் உள்ள நிலுவை தொகையை ஈடு செய்வதற்காகதான் கே.சி.சி கடனை பெற்றதாக சாட்சியம் கூறியுள்ளார் என்றால் சரிதான். அப்போது இந்த மலர் செல்வி கடன் பதிவேடு மற்றும் கடன் பெறும் ரசீது ஆகியவற்றில் கையொப்பமிட்டு கொடுத்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். இந்த பழைய STSF வங்கி கடனில் எவ்வளவு நிலுவைத் தொகை செலுத்த வேண்டும் என இருந்தது என்பதை காண்பிக்கும் ஏதாவது ஆவணத்தை நாங்கள் கைப்பற்றியுள்ளோமா என்றால் கைப்பற்றவில்லை. இந்த மலர்செல்வி அவரது

வாக்குமூலத்தில் அவரது கொழுந்தனார் ஏ.எஸ் பாண்டியன் என்பவரது மூலமாக ரூபாய் 883 யை செலுத்தி பணம் செலுத்துபவர் என்ற இடத்தில் கையொப்பமிட்டுள்ளார் என சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஏ.எஸ் பாண்டியனே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் இல்லை. கடன் தொகை வழங்கும் போது மலர்ச்செல்வியும் வந்தாரா அல்லது ஏ.எஸ். பாண்டியன் மட்டும்தான் வந்தாரா என்ற விவரத்தை விசாரணையில் தெரிந்து கொண்டோமா என்றால் இல்லை. இந்த வாக்குமூலத்தில் அசல் ரூ.3705 மற்றும் வட்டி ரூ.126 ஆக மொத்தம் ரூ.3831 செலுத்தியதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். இந்த பணத்தை எதிரி தான் எடுத்துக் கொண்டார் என்பதை காண்பிக்கும் எந்தவித ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் எதிரி தான் எடுத்துக் கொண்டார் என சாட்சி வாக்குமூலத்திலேயே குறிப்பிடவில்லை. பழைய கடனை ஈடு செய்வதற்காக பணம் செலுத்திய இரசீதை நாங்கள் இந்த வழக்கில் கைப்பற்றி உள்ளோமா என்றால் கைப்பற்றவில்லை. அந்த ரசீதை கைப்பற்றி இந்த வழக்கில் தாக்கல் செய்திருந்தால் உண்மை தெரியவரும் என்பதால் தான் நாங்கள் அதை கைப்பற்றவில்லை என சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. இந்த வரவு செலவு இருக்கும் எதுவரைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் நான் சாட்சிகளை சரியாக விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறான வழக்கை தொடர்ந்துள்ளேன் என்றாலும் சரி அல்ல.

11. ரங்கதாஸ் என்பவரும் ஏற்கனவே அவர் பெற்ற STSF கடனை ஈடு செய்வதற்காகத்தான் புதிய கடன் பெற்றதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். மேலும் கடன் பதிவேடு மற்றும் பணம் பெரும் விண்ணப்பம் ஆகியவற்றில் அவரே கையொப்பமிட்டதாகத்தான் கூறியுள்ளார் என்றால் சரிதான். எதிரியிடம் சென்று கேட்டபோது, இரசீது எண் 783 மூலம் கடன் எண் STSF 555 ல் பணம் செலுத்தப்பட்டுவிட்டது என கூறியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அந்த ரசீதை நான் விசாரணையின் போது கைப்பற்றவில்லை. பழைய கடன் எண் 555 கடனாக

பெற்றுள்ளாரா என எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அதற்காக பழைய கடன் பேரேடு மற்றும் அதன் தொடர்புடைய ஆவணங்களை நான் கைப்பற்றினேனா என்றால் இல்லை. வசூலுக்கு வந்த பணியாளர்கள் ரூபாய் 11,470 செலுத்த வேண்டும் என கூறினார்கள் என அவரது சாட்சியத்தில் கூறியுள்ளார் என்றால் சரிதான் ஆனால் எந்த பணியாளர்கள் அவ்வாறு கூறினார் என விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே செலுத்தப்பட்ட ரூ.8895/- மற்றும் கூடுதலாக செலுத்திய தொகை ரூ.2550/- மேலும், ரூ.2550/- ஆகியவை செலுத்தியிருந்தால் அதற்கு நான் தான் பொறுப்பு என எங்களிடம் ரங்கதாஸ் கூறியுள்ளார் என்றால் சரிதான். ரங்கதாஸ் தான் இந்த பணத்திற்கு பொறுப்பு என எங்களிடம் வாக்குமூலம் கூறியுள்ளார் என்றாலும், ஆனால் நாங்கள் அதையும் விடுத்து எதிரியின் மீது தவறான வழக்கை தொடர்ந்துள்ளோம் என்றால் சரியல்ல. ரங்கதாஸின் கடனை பொருத்தவரை இந்த வங்கிக்கு எந்தவித இழப்பும் இல்லை என்றால் சரியல்ல.

12. தனது சாட்சியத்தில் கடன் பேரேடு மற்றும் கடன் பெறும் விண்ணப்பம் ஆகியவற்றில் நான்தான் கையொப்பமிட்டேன் என ராமசாமி கூறியுள்ளார் என்றால் சரிதான். கே.சி.சி கணக்கு எண் 55 -ன் படி 31/03/2001 அன்று ரூ.8520/- வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது என கூறியுள்ளார் என்றால் சரிதான். யார் மூலமாக ராமசாமிக்கு தெரிய வந்தது என அவரது சாட்சியத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான் மேலும் யாரிடம் எந்த தேதியில் அந்த விண்ணப்பத்தை கொடுத்தார் என்றால் எந்த விவரமும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அப்படியானால் இதற்கு எதிரி தான் பொறுப்பு என நான் எவ்வாறு முடிவுக்கு வந்தேன் என்றால் இந்த சாட்சியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டுமே நான் தெரிந்து கொண்டேன். இந்த கணக்கு வழக்கு சம்பந்தமான ஆவணங்கள் எதையும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். இந்த கணக்கு சம்பந்தமாக எவ்வாறு முடிவுக்கு வந்தார் என ராமலிங்கமும் அவரது விசாரணையில்

எங்களிடம் கூறவில்லை என்றால் சரிதான். இந்த முறை கேட்டிருக்கும் எதிரிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

13.சின்னசாமி, என்பவர் கடன் ஏதும் பெறவில்லை என தனிப்பட்ட முறையில் புகார் ஏதும் கொடுத்துள்ளாரா என்றால் விசாரணை அலுவலர் விசாரித்த போது கூறியுள்ளார். விசாரணை அதிகாரியின் விசாரணைக்கு முன்பு வேறு எந்த கூட்டுறவுத்துறை அதிகாரிகளிடம், நான் கடன் விண்ணப்பித்தும் எனக்கு கடன் தரவில்லை என புகார் ஏதும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. சின்னசாமி கடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதையாவது நான் கைப்பற்றியுள்ளேனா என்றால் கைப்பற்றியுள்ளேன். என்ன ஆவணத்தை கைப்பற்றி உள்ளேனா என்றால் 31/3/2001 தேதியிட்ட ரூபாய் 12,136 -க்காண பட்டுவாடா வவுச்சரை கைப்பற்றியுள்ளேன். இந்த தேதி மற்றும் வவுச்சரை சின்னசாமி அவரது வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். கடன் எண் 56 -க்காண கடன் பதிவேட்டை நாங்கள் கைப்பற்றியுள்ளோமா என்றால் கைப்பற்றியுள்ளேன். அந்த கடன் தொகை இந்த சின்னசாமியால் திரும்ப செலுத்தப்பட்டு விட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த சின்னசாமியை தவிர வேறு எந்த சாட்சிகளும் எதிரி தங்களிடம் கடன் பேரேட்டிலும் பணம் பெறும் விண்ணப்பத்திலும் கையெழுத்து பெற்றார் என கூறவில்லை என்றால் சரிதான். சின்னசாமியின் வாக்குமூலத்தை தவிர மற்ற எல்லா சாட்சிகளின் வாக்குமூலத்திலும் கடன் எண், ரசீது எண் தொகை அனைத்தும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த கடன் முறையாக வழங்கப்பட்டு அதற்கான தொகை முறையாக திரும்ப செலுத்தப்பட்டுள்ளது என்பதால் தான் இந்த வாக்குமூலம் திட்டமிட்டு எங்களால் மேற்போக்காக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வங்கி கணக்கின் மூலம் இந்த வங்கிக்கு எந்தவித இழப்பும் இல்லை என்றாலும் இந்த வங்கி கணக்கில் எந்தவித முறைகேடும் நடைபெறவில்லை என்றாலும் சரி அல்ல. நான் முறையான விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

CWP

14.பூங்கோதை க/பெ.கிருஷ்ணசாமி என்பவர், எங்களிடம் கொடுத்த வாக்குமூலத்தில் கடன் பேரேடு மற்றும் பணம் பெறும் விண்ணப்பம் ஆகியவற்றில் கையொப்பமிட்டு கொடுத்தேன் என கூறியுள்ளார் என்றால் சரிதான். எந்த தேதியில் யாரிடம் கையொப்பமிட்டு கொடுத்தேன் என அவர் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வசூலுக்காக வங்கி பணியாளர்கள் வந்தபோதுதான் எனது பெயரில் ரூபாய் 16,400 மற்றும் வட்டி தொகை செலுத்த வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரிந்தது என கூறியுள்ளார் என்றால் சரிதான். இது பற்றி பூங்கோதை லட்சுமணனிடம் கேட்டபோது 31/03/2002 அன்று ரூ.18,934 செலுத்தப்பட்டதற்கு ஆதாரமாக இரசீ எண் 1308 யை அதில் பணம் செலுத்துபவர் இடத்தில் எனது கணவரின் அண்ணன் சாந்தப்பன் என்பவரிடம் கையொப்பம் பெற்று கொடுத்து அனுப்பியிருந்தார் என கூறியிருந்தார் என்றால் சரிதான். அந்த சாந்தப்பனை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அந்த சாந்தப்பனை விசாரித்தால் மட்டுமே எந்த தேதியில் எவ்வளவு தொகை செலுத்தப்பட்டது என்ற விவரம் தெரியவரும் என்றால் சரியல்ல. இப்படி ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது என பூங்கோதை யாரிடம் ஆவது தனிப்பட்ட முறையில் புகார் ஏதும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை ஆனால் விசாரணை அலுவலரிடம் கூறியுள்ளார். மீண்டும் நான் கேசிசி கடன் வழங்க கோரி கடன் பேரேடு மற்றும் கடன் பெறும் விண்ணப்பம் ஆகியவற்றில் கையொப்பமிட்டு கொடுத்தேன் என கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். ஆனால் பின்பு பணம் பெறும் விண்ணப்பத்தில் கையொப்பமிட்டு கொடுத்தேன் என கூறியுள்ளாரா என்றால் கூறவில்லை. வசூலுக்கு வந்த பணியாளர்கள் தான் நிலுவைத் தொகை பாக்கி உள்ளது என கூறியதாக வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 2 வது கடன் விண்ணப்பத்தை யாரிடம் எப்போது கையொப்பமிட்டு கொடுத்தேன் என இவர் கூறவில்லை என்றால் சரிதான். எந்த தேதியல் பணியாளர்கள் வசூலுக்கு வந்த போது கடன் நிலுவைத் தொகை இருப்பது தெரிய வந்தது என கூறியுள்ளாரா என்றால் இல்லை. முதல் கடன் 31/3/2002 ல் தான் தீர்த்துக்

கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் இரண்டாவது கடன் என்ற ஒன்று இல்லை என்றாலும் நாங்களாகவே இந்த வழக்கிற்கான அதை ஏற்படுத்திக் கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. இந்த பூங்கோதை முதலில் கடன் பெற்றுள்ளார் என்றும் இரண்டாவது முறையும் கடன் பெற்றுள்ளார் என்றும் விசாரணை அதிகாரி ராமலிங்கம் அவரது வாக்குமூலத்தில் ஏதேனும் கூறியுள்ளாரா என்றால் இல்லை. இந்த இனத்தில் எந்தவித முறைகேடும் ஏற்படவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த இனத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரி அல்ல. நான் முறையான ஆவணங்களை சரியாக பரிசீலிக்காமல் எதிரியின் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.